8th March 1965]

திரு. மீ. கலியாணசுந்தரம் : ஆரம்பத்திலே எதிர்பார்த்ததை விட தலைவர்கள் தேர்ந்தெடுக்க காலதாமதம் ஆகிவிட்டது. இரண்டு மாதத்தில் இன்னும் ஒரு மாத காலம்தான் இருக்கும். இடைக்காலத்தில் இரண்டு விதத்தில் சங்கடங்கள் ஏற்படுகின்றன. ஒன்று தாற்காலிகத் தலைவர்களிடம் பொறுப்பை ஒப்படைத்ததால் வேலை செய்ய முடியாமல் போகிறது. இரண்டு தாற்காலிகத் தலைவர்கள் வேலை செய்தாலும் கொடுக்கப்பட்டிருக்கிற அதிகாரம் போதுமானதாக இல்லை. ஊழியர்களுக்குச் சம்பளம் கொடுப்பதற்கும் மின்சாரக் கட்டணம் செலுத்துவதற்கும் மட்டும்தான் முடியும். பஞ்சாயத்து அலுவலகங்கள் வாடகை வீட்டில் உள்ளன. தங்கள் கட்டடங்களை பஞ்சாயத்து யூனியனுக்கு வாடகைக்கு விட்டிருப்பவர்கள் நிலைமை என்ன என்பதை அரசாங்கம் ஆலோசிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : எதிர்பாராத நிலைமை காரணமாக இந்த மாதிரித் தேர்தலைத் தள்ளிப்போட வேண்டிய நிலை ஏற்பட்டது என்பதை கனம் அங்கத்தினர் அறிவார். ஏழு நாட்களுக்கு உட்பட்ட முறையிலேதான் டெம்பரரி பிரெஸிடெண்ட் பதவியில் இருக்கலாம். இதை ஒத்திப்போடுவதால் ஏறக்குறைய இரண்டு மாதங்களுக்கு நீடிக்கும் இந்த நிலை தவிர்க்க முடியாது என்பதை கனம் அங்கத்தினருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கரு. சீமைச்சாமி : பஞ்சாயத்து யூனியன் கூட்டம் மாதம் ஒரு தடவையாவது நடக்க வேண்டியிருக்கிறது. மார்ச் மாதம் முடியும் போது பல வேலைகளைப் பஞ்சாயத்துக்கள் செய்து முடிக்க வேண்டி இருக்கிறது. பஞ்சாயத்து கவுன்சில் கூட்டத்தை யார் நடத்துவது? இது சம்பந்தமாக சர்க்கார் ஒரு அறிக்கை அனுப்புமா ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : தேர்தல் முடிந்த உடனே உடனடியாகக் கூடுவார்கள்.

அரசாங்கத்திற்கு பொதுக்கணக்குக் குழுவின் கருத்துரை

* 173 கேள்வி—புலவர் கா. கோவிந்தன் : கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1961-ல் தஞ்சை, இராமநாதபுரம் கஜானக்களில் உண்மைக்கு மாறான பட்டியல்கள் (Bogus bills) கொடுத்து ரூ. 66,390 பெறப்பட்டதன் மீது அரசு எடுத்துக் கொண்ட நடவடிக்கை போதுமான தன்று என 1963-64-ம் ஆண்டு பொதுக் கணக்குக் குழு கருத்துத் தெரிவித்துள்ளதா ?

(இ) ஆம் எனில் அரசு அதன் மீது எடுத்துக் கொண்ட நடவடிக்கை என்ன ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : (அ) இது குறித்து பொதுக் கணக்குக் குழு தன்னுடைய அதிருப்தியைத் தெரிவித்திருப்பதுடன் தஞ்சாவூர் கருவூல அதிகாரி மீது விரைவில் நடவடிக்கை

எடுக்குமாறும், துறை அளவில் ஒழுங்கு நடவடிக்கைகளைத் தாமத மின்றி முடிவு செய்யுமாறும் கருத்துத் தெரிவித்துள்ளது.

(இ) தஞ்சாவூர் கருவூல அதிகாரி மீது நடவடிக்கை தொடங்கப்பட்டுவிட்டது. நிர்ணய நடைமுறைகளைப் பின்பற்றி இறுதி உத்தரவுகள் விரைவில் பிறப்பிக்கப்படும். இவ் வழக்கில் தொடர்புள்ள மற்றவர்களைப் பொறுத்த வரையில், துறை அளவில் ஒழுங்கு நடவடிக்கைகளை முடிவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

(a) The Public Accounts Committee had expressed its unhappiness in this case and suggested that action against the Treasury Officer, Thanjavur may also be initiated early and the Departmental Proceedings may also be finalised without delay.

(b) The action against the Treasury Officer, Thanjavur has been initiated and final orders will be passed early ater following the prescribed procedures. In respect of others connected with this case action is being pursued expeditiously to finalise the Departmental Proceedings.

புலவர் க.ர. கோவிந்தன் : இரண்டு மாவட்டங்களிலே நடைபெற்ற நிகழ்ச்சிகளைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். தஞ்சை ஜில்லாவிலே உள்ள அதிகாரியின் மீது எடுத்த நடவடிக்கைப்பற்றிதான் கூறினார்கள். மற்ற மாவட்டங்களிலே என்ன நடவடிக்கை எடுத்து இருக்கிறார்கள் ? பொதுக் கணக்குக் குழு சிபார்சுக்கு முன் எடுத்த நடவடிக்கை என்ன ? எடுத்த நடவடிக்கை போதுமானதல்ல என்று பொதுக் கணக்குக் குழு அபிப்பிராயம் தெரிவிப்பதற்குக் காரணம் என்ன என்பதை அமைச்சர் விளக்குவாரா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : வேறு மாவட்டங்களில் இவ்வாறு நடந்திருப்பதாக கனம் அங்கத்தினர் சொல்வதுபற்றி என்னிடம் தகவல் இல்லை. எப்போது இந்த நடவடிக்கை தொடங்கப்பட்டது என்பதுபற்றித் தனிக் கேள்வி வேண்டும்.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : இவ்வளவு பெரும் தொகையை கையாடல் செய்த அதிகாரிகளின் பேரில் கிரிமினல் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றதா அல்லது அரசாங்கத்திற்கு ஏற்பட்ட நஷ்டத்தைச் சரிக்கட்ட சிவில் நடவடிக்கை மேற்கொண்டு அந்தந்த அதிகாரிகளின் சொத்தை ஜப்தி செய்ய நடவடிக்கை எடுக்க சர்க்காருக்கு உத்தேசம் இருக்கிறதா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இதில் பணம் கையாடல் இல்லை. 'போகஸ் பில்ஸ்' தயாரித்துக் கொடுத்து அதன் பேரில் பணம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதன்பேரில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. சட்ட பூர்வமாக என்னென்ன நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமோ அது கவனிக்கப்பட்டு வருகிறது.

திரு. செ. மாதவன் : ராமநாதபுரத்தைப்பற்றியும் இந்தக் கேள்வி கொடுக்கப்பட்டிருக்கிறது. தஞ்சை, ராமநாதபுரம் இரண்டிலும் ஒரே மாதிரி தவறுகள் நடந்திருக்கின்றன. பில்லை கொண்டுபோய் பிரசென்ட் செய்து இருக்கிறார்கள். டிரெஷரி அலுவலகத்திலுள்ள

அதிகாரி சாட்சியாக சிபார்சு செய்திருக்கிறார். பொதுக் கணக்குக் குழு செய்து முடிவு அது அந்த சாட்சி உதவி செய்த அதிகாரி சாட்சியாக சிபார்சு செய்திருக்கிறார். பொதுக் கணக்குக் குழு காண்பித்து இருக்கிறது. அவர்கள் மீது இப்போது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : ராமநாதபுரம் டிரெஷரி டெபுடி கலெக்டர் மீது நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்பட்டு வருகிறது. போலிசார் விசாரணையிலே என்ன வகையிலே மேற்கொண்டு நடவடிக்கை எடுத்துக் கொள்ளலாம் என்று சொன்னார்களோ அது கவனிக்கப்பட்டு வருகிறது. விசாரணையில் என்னென்ன தகவல் கள் கிடைக்கிறதோ அதன்படி நடவடிக்கை எடுத்துக்கொள்ளப் படும்.

திரு. கே. ஏ. மதியழகன் : பொதுக்கணக்குக் குழு 'அடிக்வேட் ஆக்ஷன்' போதுமான நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்று கூறியிருக்கிறது. பொதுக்கணக்குக் குழு சிபார்சுக்கு முன்பு எடுத்துக் கொண்ட நடவடிக்கை என்ன ? அதிலிருந்து இப்போது எந்த அளவுக்கு மாறி நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்பட்டிருக் கிறது என்பதைப்பற்றி விவரம் கூற முடியுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இப்போது நடவடிக்கை எடுததுக்கொள்ளப்பட்டு வருகிறது. சம்பந்தப்பட்ட அதிகாரிகள் யார் மீது குற்றம் சாட்டப்படலாமோ, யார் பொறுப்பாக இருந் தார்களோ, அவர்கள் மீது நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்பட்டு வருகின்றது. எப்போது தொடங்கப்பட்டது என்பதற்கு தனிக் கேள்வி வேண்டும் என்று முன்பே கூறினேன்.

திரு. எம். வி. கரிவேங்கடம் : இந்த விஷயத்தைப் பார்க்கிற போது பெரிய மோசடி நடந்து இருக்கிறது என்று தெரிகிறது. சம்பந்தப்பட்ட யார் மீதாவது மோசடி கிரிமினல் வழக்கு தொடரப்பட்டிருக்கிறதா ? அப்படி இருந்தால் அதன் விவரம் என்ன ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : கிரிமினல் வழக்கு தொடர பரிசிலனை வேண்டும், ஆதாரம் வேண்டும், சாட்சியம் வேண்டும். இவையெல்லாம் கவனிக்கப்பட்டு வருகிறது.

திரு. செ. மாதவன் : போலீசாரைப்பற்றி கனம் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். போலீசார் இப்படித் தவறு செய்ப வர்களை ஒன்றும் செய்ய முடியவில்லை என்று சொல்வார்கள். இலாகா மூலம் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கப்படுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : போலீசார் என்னென்ன வகை யிலே இதை இன்வெஸ்டிகேட் செய்யலாமோ அப்படிச் செய்தார் கள். சம்பந்தப்பட்ட அதிகாரிகளைப் பொறுத்தமட்டில் அதிகார வகையில் நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்பட்டு வருகிறது.

திரு. கே. ஏ. மதியழகன் : பொதுக்கணக்குக் குழு போதுமான நடவடிக்கை எடுக்கவில்லை என்று குற்றம் சாட்டி இருக்கிறது.

அப்படிப் போதுமான நடவடிக்கை எடுக்கவில்லை என்று குற்றம் சாட்டுவதற்கு என்ன காரணங்களை பொதுக் கணக்குக் குழு கூறியிருக்கிறது என்று கூற முடியுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : டிரெஷரி ஆபீசரைப் பொறுத்த மட்டில் அவர் மீது, 'பிராட், டிஸானஸ்டி' இல்லை என்பதுதான் புலப்பட்டது. அதன் பேரில் 'நெக்லிஜென்ஸ் ஆஃப் டியூடி' என்ற வகையில்தான் நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்பட்டு வருகிறது.

Train accident at Pallapatti on 23rd December **1964.**

* **174 Q.**—SRI V. SANKARAN : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether it is a fact that an accident occurred to Trivandrum Express at Pallapatti in Madurai district on 23rd December 1964;

(*b*) if so, the number of persons injured and the number died; and

(*c*) the relief measures taken by the State Government apart from those taken by the Central Government?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Yes.

(*b*) Four persons were killed and twenty- three injured.

(*c*) The Collector of Madurai and officers of the Police Department proceeded to the scene of the accident and personally supervised the rescue and relief operations and arranged for the removal of the injured to the Hospital at Madurai. The question of grant of any financial assistance by this Government does not arise.

திரு. வை. சங்கரன் : இந்த விபத்து ஏற்பட்ட உடனே உடனடியாக வெள்ளத்தால் அடித்துச் செல்லப்பட்ட பொருள்களைத் தேடிப் பிடிக்க வெளிச்சம் இல்லாத காரணத்தால் அல்லல் அதிகமாகிவிட்டது என்று தெரிகிறது. இனியாவது ஒவ்வொரு வண்டியிலும் கார்டு வானிலே ஒரு சில 'பவர்ஃபுல்' டார்ச்சுகளை 'ப்ரொவைட்' பண்ண மத்திய அரசாங்கத்திற்கு இந்த அரசாங்கம் சிபார்சு செய்யுமா ?

கனம். திரு. எம் பக்தவத்சலம் : இப்போது அதைப்பற்றி ரயில்வே இலாகா விசாரணை ஏற்படுத்தி இருக்கிறார்கள். அந்த விசாரணையில் புலப்படக்கூடியதெல்லாம் ரயில்வே இலாகாவினரால் கவனிக்கப்படும்.

திரு. மீ. கலியாணசுந்தரம் : ரயில்வே இலாகா நடத்தும் விசாரணை ஒரு அதிகாரியை கொண்ட விசாரணை. பொது விசாரணை—ஒரு நீதிபதியைக் கொண்ட விசாரணை அல்ல அது. இந்த விபத்து தவிர்க்கப்பட்டிருக்கலாம் என்று சில அதிகாரிகள் கருதுவதால், ஒரு நீதிபதியை வைத்தோ அல்லது விசாரணைக் குழு நியமித்தோ விசாரணை செய்ய வேண்டும் என்று இந்த அரசாங்கம் மத்திய அரசாங்கத்திற்குச் சிபார்சு செய்யுமா ?